# கிருபையுள்ள வார்த்தை ®

# KIRUBAIYULLA VAARTHAI


Vol - 16 | November நவம்பர் | 2015

ஆண்டு சந்தா ரூ. 120/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-




## உன் தேவனாகிய கர்த்தரை பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக.

மத்தேயு 6:10

கடவுள் அருவருக்கும் விக்கிரகாராதனைக்கு எதிரான விழிப்புணர்வு இதழ் !


கௌரவ ஆசிரியர் **Betty Choate** ஆசிரியர் **பிலேமோன் ராஜா**


புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


பெற்றோருக்கான தேவனுடைய... 3
நமது குடும்பத்தில் அதிகாரம் 8
காணாமற்போன நிலை 10
நியாயதிபதிகள், ரூத் 13
நாம் முற்றிலும் வெற்றி... 15
சிறுவர் பகுதி 18



*In memory of* **J.C. CHOATE**

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லிராஜா,** M.S. (I.T.& M.)., M.Th.,
**Dr. V.S. இம்மானுவேல்,** M.Sc., D.D.,
**C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,
**R. ஆண்டனி ராஜா,** D.Th.,
சட்ட ஆலோசகர் : **M. முரளி** B.A.,B.L.


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

வாசகர்கள் கவனத்திற்கு...

**புதுயுகம் T.V. யில்**

செவ்வாய் காலை - 6.15 மணிக்கு கிருபையுள்ள வார்த்தை நிகழ்ச்சியினை காணத்தவறாதீர்.

**தமிழன் T.V. யில்**

**ஞாயிறு** காலை 6-45 மணி

பாருங்கள் ! பயன் அடையுங்கள் !


செய்தியாளர்கள்:

போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா,** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)





## இலவசம் ! இலவசம் !

கிருபையுள்ள வார்த்தை வாசகர்களே! எமது புதிய வெளியீடான, நமது ஆசிரியரின் TV செய்திகள் அடங்கிய **"பிரசங்க குறிப்புகள்"** புத்தகத்தினை இலவச பரிசாக பெற்றுக் கொள்ள, உங்களது தெளிவான முகவரி, தொலைபேசி எண் மற்றும் பதிவு எண்ணுடன் எங்களுக்கு ஒரு தபால் அட்டையில் எழுதி அனுப்புங்கள்! SMS மூலமாகவும் விபரங்களை எங்களுக்கு அனுப்பலாம்.


குறிப்பு : தபால் செலவு உங்களுடையது !
முந்தி வரும் தொடர்புகளுக்கே முன்னுரிமை அளிக்கப்படும் !

போன்
**92 4421 4421, 924431 4431, 9791760010**

**கிருபையுள்ள வார்த்தை**

**"ஒன்றான மெய் தேவனை வழிபட உதவும் ஒப்பில்லா வார்த்தை"**


**World Literature Publication**
Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India


**Send Postal Expenses only and receive The Voice of Truth Intl. Vol.85**

# பரலோக தேவனுடைய பார்வையில் விக்கிரகங்கள்!

## IDOLS IN SIGHT OF GOD OF HEAVEN



பிரியமானவர்களே ! உங்கள் அனைவரையும் ஆண்டவர் இயேசுவின் நாமத்தினாலே வாழ்த்தி, இவ்விதழ் மூலம் சந்திப்பதிலே மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இன்றைய கிறிஸ்தவ மார்க்க வட்டாரத்தை மிகவும் பாழ்ப்படுத்த சாத்தான் விரித்திருக்கின்ற மிகப்பெரிய வலை விக்கிரகாரதனை. இதனைப் பற்றி நாம் இக்கட்டுரையில் நாம் ஆழமாக தியானம் செய்வோம்.

உங்கள் வேதாகமத்துடன், உங்கள் இருதயத்தை தேவனுடைய இருதயத்துடன் பொருத்தி, இப்பாடத்தை மிகவும் பொறுமையுடன் கவனமாக படிக்க உங்களை அன்புடன் வேண்டுகிறேன். பரிசுத்த ஆவியானவர் தாமே வேதத்தின் வெளிச்சத்திலே, தேவ சித்தத்தை நாம் நிறைவேற்ற நிச்சயம் உதவி செய்வாராக!

✶ விக்கிரகாராதனை என்பது பரலோக தேவனால் சகிக்கக்கூடாத கொடும் பாவமாயிருக்கின்றது. ஆகையால் தான் இஸ்ரவேலர்களுக்கு பத்துகட்டளைகளில் முதலிரண்டு கட்டளையில் விக்கிரகத்தை வழிபட வேண்டாம், அவற்றை உண்டாக்கவும் வேண்டாம் என்றார். "...உன் தேவனாகிய கர்த்தர் நானே. என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம். மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடையஅ க்கிரமத்தைப்பி ள்ளைகளிடத்தில்மூ ன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன்." **(யாத் 20:2–5)**

✶ ஏனெனில் விக்கிரக (Idol) வழிபாடு தேவனுடைய மகிமையை மட்டுப்படுத்துவதாகும். அதாவது, ஜீவனுள்ள தேவனுடைய இடத்தை மாயையான விக்கிரகங்களுக்கு கொடுப்பதாக இருக்கிறது. "நான் கர்த்தர், இது என் நாமம்; என் மகிமையை வேறொருவனுக்கும், என் துதியை விக்கிரகங்களுக்கும் கொடேன்." **(ஏசா 42:8).** மற்றும் **ஏசா 48:11ல்** "என்னிமித்தம் என்னிமித்தமே, அப்படிச் செய்வேன்; என் நாமத்தின் பரிசுத்தம் எப்படிக் குலைக்கப்படலாம்? என் மகிமையை நான் வேறொருவருக்குங்கொடேன்." என்று கூறுகிறார். தேவன் தன்னுடைய இடத்தை யாருக்கும் பகிரவோ கொடுக்கவோ மாட்டார். இது ஆனித்தரமான பரலோக தேவனுடைய எச்சரிக்கை.

✶ ஆகையால் தான் பரலோக தேவன், அவைகளின் பெயர்களைக்கூட உச்சரிக்காதே! என்று எச்சரிக்கிறார். அந்நிய தேவனை நாடிப் பின்பற்றுகிறவர்களுக்கு வேதனைகள் பெருகும்; அவர்கள் செலுத்துகிற இரத்தபானபலிகளை நான் செலுத்தமாட்டேன். அவர்கள் நாமங்களை என் உதடுகளினால் உச்சரிக்கவுமாட்டேன்." **(சங் 16:4).** அந்த நினைவுக்கூட நம்மிடத்தில் இருக்கக்கூடாது! "பாகால்களுடைய நாமங்களை அவள் வாயிலிருந்து அற்றுப்போகப் பண்ணுவேன்; இனி அவைகளின்பே பரைச் சொல்லி, அவைகளை நினைக்கிற



மரம் வளர்ப்போம் ! மழை பெறுவோம் !!


நினைப்பும் இல்லாமற் போகும்". **(ஓசி 2:17).** என்று வேதம் கூறுகிறது.

✶ தேவன் வனாந்தரத்திலே மிகவும் உக்கிர கோபங்கொண்டு, இஸ்ரவேலர்கள் ஏறக்குறைய ஆறு லட்சம் பேரும் கானானுக்குள் பிரவேசிக்காதபடி அந்த தலைமுறை முழுவதையும் வனாந்தரத்திலே அழித்ததற்கு விக்கிரக ஆராதனைக் கூட மிகப்பெரிய காரணமாக இருக்கலாம்! "அவர்கள் தங்கள் தேவர்களுக்கு இட்டபாலிகளை விருந்துண்ணும்படி ஜனங்களை அழைத்தார்கள், ஜனங்கள் போய்ப் புசித்து அவர்கள் தேவர்களைப் பணிந்துகொண்டார்கள். இப்படி இஸ்ரவேல் பாகால்பேயோரைப் பற்றிக்கொண்டார்கள்; அதனால் இஸ்ரவேலர்மேல் கர்த்தருடைய கோபம் மூண்டது. கர்த்தர் மோசேயை நோக்கி: கர்த்தருடைய உக்கிரமான கோபம் இஸ்ரவேலைவிட்டு நீங்கும்படி நீ ஜனங்களின் தலைவர் எல்லாரையும் கூட்டிக்கொண்டு, அப்படிச் செய்தவர்களைச் சூரியனுக்கு எதிரே கர்த்தருடைய சந்நிதானத்தில் தூக்கிப்போடும்படி செய் என்றார்." **(எண் 25:2–4)**

✶ மேலும் இன்று வாழ்ந்துக்கொண்டிக்கிற நமக்கு அதை திருஷ்டாந்தமாக வைத்து எச்சரிக்கை கொடுக்கிறார். "வனாந்தரத்திலே கோபமூட்டினபோதும், சோதனைநாளிலும் நடந்ததுபோல உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள். ...ஆதலால், நான் அந்தச் சந்ததியை அரோசித்து,... என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லையென்று என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன். சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள்." **(எபி 3:8–12).**

✶ அந்த வழிபாடு கண்ணியாயிருக்கும். அவைகளை உடைத்துப்போடுங்கள் மற்றும் அவைகளை வழிபட்டவர்களை அழித்துப்போடுங்கள், என்றார். "நீ அவர்களுடைய தேவர்களைப் பணிந்துகொள்ளாமலும் சேவியாமலும் அவர்கள் செய்கைகளின்படி செய்யாமலும் அவர்களை நிர்மூலம்பண்ணி அவர்களுடைய சிலைகளை உடைத்துப்போடுவாயாக." (யாத் 23:14). மற்றும் "நீ போய்ச் சேருகிற தேசத்தின் குடிகளோடு உடன்படிக்கை பண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிரு; பண்ணினால் அது உன் நடுவில் கண்ணியாயிருக்கும். அவர்களுடைய பலிபீடங்களை இடித்து, அவர்கள் சிலைகளைத் தகர்த்து அவர்கள் தோப்புகளை வெட்டிப்போடுங்கள்." **(யாத் 34:12–13).** தாங்கள் வாழ்கிற நாட்டு மக்களின் எந்தவொரு வழிபாட்டு முறைமைகளையும், தன்னுடைய மக்கள் செய்வதை பரலோக தேவன் ஏற்றுக்கொள்வதே இல்லை.

✶ அந்த வழிபாட்டை செய்ததினாலும், இஸ்ரவேலை செய்ய தூண்டினதாலும், யெரோபெயாமும் அவன் சந்ததியும் சபிக்கப்பட்டது. "ஆகையால் இதோ நான் யெரொபெயாமுடைய வீட்டின்மேல் பொல்லாப்பை வரப்பண்ணி, யெரொபெயாமுக்கு, சுவர்மேல் நீர்விடும் ஒரு நாய் முதலாயிராத படிக்கு இஸ்ரவேலிலே அடைப்பட்டவனையும் விடுபட்டவனையும் சங்காரம்பண்ணி, குப்பை கழித்துப் போடப்படுகிறது போல யெரொபெயாமின் பின்னடியாரை அவர்கள் கட்டோடே அற்றுப்போகுமட்டும் கழித்துப்போடுவேன் என்றார்." **(1 இரா 14:10).**



✶ அந்த வழிபாட்டின் வாடையே இருக்கக்கூடாது என்பதற்காக, திருமண பந்தத்திலே அப்படிப்பட்டவர்களுடன் இணையாதே, என்றார். அப்படி செய்தவர்களை நெகேமியா, "கடிந்துகொண்டு அவர்கள்மேல் வரும் சாபத்தைக்கூறி, அவர்களில் சிலரை அடித்து, மயிரைப் பிய்த்து, நீங்கள் உங்கள் குமாரத்தியகளை அவர்கள் குமாரருக்குக் கொடாமலும் அவர்கள் குமாரத்திகளில் ஒருவரையும் உங்கள் குமாரருக்காகிலும் உங்களுக்காகிலும் கொள்ளாமலும் இருக்கவேண்டுமென்று அவர்களைத் தேவன்மேல்

**செல்போன் பேசிக்கொண்டே வாகனத்தை ஓட்ட வேண்டாம்!**

ஆணையிடப்பண்ணி, ...இஸ்ரவேலின் ராஜாவாகிய சாலொமோன் இதினாலே பாவஞ்செய்தானல்லவா? அவனைப் போன்ற ராஜா அநேகம் ஜாதிகளுக்குள்ளே உண்டாயிருந்ததில்லை; அவன் தன் தேவானலே சிநேகிக்கப்பட்டவனாயிருந்தான்; தேவன் அவனை இஸ்ரவேலனைத்தின் மேலும் ராஜாவாக வைத்தார், அப்படிப்பட்டவனையும் மறுஜாதியான ஸ்தீரிகள் பாவஞ்செய்யப் பண்ணினார்களே. நீங்கள் மறுஜாதியான ஸ்திரீகளைச் சேர்த்துக்கொள்ளுகிறதினால் நம்முடைய தேவனுக்குத் துரோகிகளாகி, இந்தப் பெரிய பொல்லாப்பையெல்லாம் செய்யுபடி, உங்களுக்கு இடங்கொடுப்போமோ" என்று எச்சரித்தார். **(நெகேமியா 13:25-27)**

* இரட்சிக்கப்படாதவரை திருமணம் செய்ய தேர்வு செய்துவிட்டு, திருமணத்திற்காக திருமுழுக்கு எடுக்க சொல்வது இப்பொழுது மிகவும் பரவலாக கிறிஸ்தவர்கள் மத்தியில் இருக்கிறது. இது எல்லாம் வல்ல தேவனுக்கு எரிச்சலை உண்டாக்குவதாகும். எரிச்சலை உண்டாக்கின இஸ்ரவேலர்கள் என்ன ஆனார்கள் என்பது நமக்கு மிகப்பெரிய எச்சரிக்கை.



* அவைகளுக்கு (விக்கிரகங்கட்கு) பயன்படுத்தப்பட்ட பொன்னையும் வெள்ளியையும் கூட, உனக்காக நீ பயன்படுத்தாதே! அது தீட்டு என்றார்; "உன் சுரூபங்களை மூடிய வெள்ளித்தகட்டையும், உன் விக்கிரகங்களின் பொன் ஆடையாபரணத்தையும் தீட்டாக எண்ணி, அவைகளைத் தீட்டுப்பட்ட வஸ்திரம்போல எறிந்துவிட்டு, அதைச் சீ! போ என்பாய்." **(ஏசா 30:22).**

* அவைகளுக்கு படைக்கப்பட்டதை உண்ணுவதை பகிரங்கமாக எதிர்க்கிறார். "விக்கிரகங்களுக்குப் படைத்த அசுசியானவைகளுக்கும், வேசித்தனத்திற்கும், நெருங்குண்டு செத்ததிற்கும், இரத்தத்திற்கும் விலகியிருக்கும்படி அவர்களுக்கு நாம் எழுதவேண்டுமென்றும் நான் தீர்மானிக்கிறேன்." **(அப் 15:20).**

* தமது எதிர்ப்பை ஆவியானவர் இவ்வாறாக வெளிப்படுத்தினார். "அஞ்ஞானிகள் பலியிடுகிறவைகளை தேவனுக்கு அல்ல, பேய்களுக்கே பலியிடுகிறார்ளென்று சொல்லுகிறேன்; நீங்கள் பேய்களோடே ஐக்கியமாயிருக்க எனக்கு மனதில்லை. நீங்கள் கர்த்தருடைய பாத்திரத்திலும் பேய்களுடைய பாத்திரத்திலும் பானம்பண்ணக்கூடாதே; நீங்கள் கர்த்தருடைய போஜனபந்திக்கும் பேய்களுடைய போஜனபந்திக்கும் பங்குள்ளவர்களாயிருக்கக் கூடாதே." **(1கொரி 10:20,21)**

* விபச்சாரம் செய்பவர்களும், விக்கிரகாரதனைக் காரர்களும் நரகத்தண்டனைக்கு உரியவர்கள். **வெளி21:8** "பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார்."

* ஆகையால் நம்மை, விக்கிரகாரதனைக்கு விலகியோடுங்கள் என்கிறார். "பிள்ளைகளே, நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி உங்களைக் காத்துக்கொள்வீர்களாக. ஆமென்." **(1 யோவான் 5:21).** மற்றும் "ஆகையால், விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள்." **(கொலோ 3:5).**

* அப்படியானால், நாம் ஜீவனுள்ள பரலோக தேவனை வைராக்கியமாக தேடி, அவரை தொழுகை செய்ய வேண்டும். விக்கிரகத்தை விட்டு விலகுவது மட்டும் முக்கியமல்ல மாறாக ஜீவனுள்ள தேவனை தேடி தொழுகை செய்யாமல், தேவனைப் பற்றி அறிகிற அறிவியல் வளரும் படி சபையின் பைபிள் ஸ்டடியை தவற விடுவதும் கொடிய பாவம்.

**- அன்புடன், ஆசிரியர்**

**வரதட்சனை வாங்க வேண்டாம் ! கொடுக்க வேண்டாம் !!**

# என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம் !

யாத் 20: 1-6: இவ்வசனம் எவ்வடிவிலுமான விக்கிரக ஆராதனையை கண்டிக்கிறது. ஏதாவது ஒரு காரணத்திற்காக மனிதன், தேவனுடைய சட்டத்தையும் திட்டத்தையும் எதிர்த்து வருகிறான் (ரோ. 1:18-32). இவ்வசனங்கள் தேவனற்ற புறஜாதி தேசங்களின் நிலைமையை விளக்குகின்றது.

கானான் தேசத்திற்குள் பிரசேவிக்கும்போது, தங்களிடமிருந்து விக்கிரக ஆராதனையின் எல்லா அடையாளங்களையும் அழித்துப் போடும்படி, தேவன் இஸ்ரவேலருக்கு கட்டளையிட்டிருந்தார். "அத்தேத்துக் குடிகளையெல்லாம் உங்களுக்கு முன்பாகத் துரத்திவிட்டு, அவர்களுடைய எல்லாச் சிலைகளையும், வார்ப்பிக்கப்பட்ட அவர்களுடைய எல்லா விக்கிரங்களையும் அழித்து, அவர்கள் மேடைகளையெல்லாம் நிர்மூலமாக்கி," **(எண். 33:52).** தேவனுடைய கட்டளை இப்படியாக இருப்பினும், இஸ்ரவேலர் சில நாட்களுக்குள்ளேயே விக்கிரக ஆராதனையில் ஈடுபட்டனர். இதைப்பற்றிய உண்மைகளை அறிந்துகொள்ள, ஒருவர் பழைய ஏற்பாட்டை படிக்க வேண்டும். இப்படி இஸ்ரவேலரை விக்கிரக ஆராதனையில் ஈடுபடுத்த, நிறைய ராஜாக்கள் காரணமாக இருந்தனர்.

உதாரணமாக, அநேக எபிரெயர்கள், ''வேறே தெய்வங்களை'' வழிபட்டனர் : அஸ்ரோத், என்ற உயர்வான இடங்களின் தெய்வம்; செழிப்பின் தெய்வமாகிய பாகால்; மோளேகு என்ற பலிகளின் தெய்வம்; மேலும் இத்தெய்வத்திற்கு பிள்ளைகள் உயிருடன் எரிக்கப்பட்டனர். இன்னும் பல தெய்வங்களையும் வைத்திருந்தனர்.

<u>கிரேக்கர்களும்</u> தங்களுக்கு தெய்வங்களை வைத்திருந்தனர்; நமக்கு எழும்பும் கேள்வி என்னவென்றால், நாம் நினைக்கின்றபடி விக்கிரகங்களில் இருந்து நாம் தேவையான தூரம் விலகியிருக்கின்றோமா? இல்லையென்றே நான் நினைக்கின்றேன். விக்கிரகமானது மிகவும் மோசமான பாதிப்பை உண்டாக்கும் என்று ஒருவர் அறிந்துகொள்ள வேண்டும்; ஏனென்றால், யார் ஒருவரும் தான் ஆராதிக்கின்ற பொருளைப் போலவே மாறிவிடுகிறார்.

சரி, இந்த நவீன காலத்தில் இருக்கக்கூடிய சில தெய்வங்கள் (விக்கிரகங்கள்) என்ன? பாருங்கள், <u>தொழில்நுட்பம்</u> என்னும் தெய்வம் உள்ளது. அநேக ஆயிரக்கணக்கானோர் நினைப்பது என்னவென்றால், நவீன கணினியும் நவீன விஞ்ஞானமும், நம்முடைய இன்றைய எல்லா பிரச்சனைகளை தீர்த்துவிடும் என எண்ணுகின்றனர். ஏன் அவைகளால் நம்முடைய பிரச்சனைகளை எல்லாம் சரி செய்ய முடியாது. ஏனென்றால், மனிதனுக்கு ஆவியும் மனசாட்சியும் இருப்பதினால், அவனுக்கு அதினால் பாவம் என்னும் பிரச்சனை உண்டு. எந்த கணினியினாலும் (கம்ப்யூட்டர்) இப்பிரச்சனையை (பாவ பிரச்சனை) சரி செய்ய முடியாது. இந்தப் பிரச்சனையை தீர்ப்பதற்கான தேவ (கடவுளுடைய) வல்லமை சுவிஷேசமே! **(ரோ 1:16; மாற்கு 16:15-16).** ஒருவர் இந்த உலகத்தில் உள்ள அனைத்தையுமே பெற்றுக்கொண்டாலும், தன்னுடைய ஆத்துமாவை பாவத்தினால் இழந்துபோனால், அவர் எல்லாவற்றையும் இழக்கின்றார் **(மத் 16:26).**

<u>உலகப் பொருட்களை</u> தெய்வமாக்கி பார்ப்பது இன்று அநேக இடங்களில் உள்ளது. ஆயிரக்கணக்கானோர் தங்கள் உடைமைகளை வணங்குகின்றனர். வீடு, பணம், வாகனங்கள், சேமிப்புகள், விலையேறப்பெற்ற உடைகள், நகைகள் போன்றவையே.



''இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப் பகைத்து, மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு, மற்றவனை அசட்டைபண்ணுவான்; தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ் செய்ய உங்களால் கூடாது." **(மத் 6:24).** கடவுளும், கடவுளுடைய வார்த்தைகளும் இருக்க வேண்டிய இடமாகிய மனித மனங்களிலே (இருதயத்திலே), எப்பொழுதும் இப்படிப்பட்டவைகளைப் பற்றிய நினைப்பே உள்ளது. ஒரு மனிதனுடைய வாழ்க்கை அவன் பெற்றிருக்கும் அபரீதமான செல்வங்களினால் (சொத்துக்களினால்) ஆனதல்ல (லூக் 12:13-21). பணம் என்பது விலையேறப்பெற்றது தான்; ஆனால் அதினால் எல்லாவற்றையும் வாங்கிவிட முடியாது **(பிரசங்கி 8:8:1**



**லஞ்சம் வாங்காதீர் ! லஞ்சம் கொடுக்காதீர் !!**



தீமோ 6:6–18). ஆகையினால் தான், "பண ஆசை எல்லா தீமைக்கும் வேராயிருக்கின்றது."

"சுயம்" என்னும் கடவுளை, அநேகர் விக்கிரகமாக ஆராதித்து வருகின்றனர். சுயத்தின் மீது அன்பு வைத்துவிடாதீர்கள். உங்களைப் பற்றி அக்கறைப்படுவது நல்லது தான்; ஆனாலும் அதை எல்லையில்லாமல் வைக்க வேண்டாம் (ரோ 12:1–3). கடவுள், இயேசு கிறிஸ்து, அவருடைய சபை மற்றும் பைபிள் ஆகியோரின்/ஆகியவற்றின் உதவி இல்லாமல், தன்னால் ஒன்றுமே செய்ய முடியாது என்பதை மனிதன் உறை வேண்டும் (யோ 15:1–7).



இது மட்டுமல்லாமல், நம்முடைய நாட்டில் இப்போது ஒரு பாலியல் பாவங்களின் கலாச்சாரங்கள் உள்ளன. உண்மையை சொல்லப்போனால், பாலியல் உறவு என்பது அநேகருக்கு பெரிய வியாபார உக்தியாக மாறிவிட்டது. பத்திரிக்கைகளிலோ, TVயிலோ, செய்தித்தாள்களிலோ பாலியல் சார்ந்த (ஆபாச) செய்திகளும், படங்களும் அபரிதமாக உலா வந்து கொண்டிருக்கின்றன. ஏன், குழந்தைகள் மட்டுமே பார்க்கும் கார்டூன்களிலும் கூட ஆபாச வார்த்தைகளும், ஆபாசங்கள் நிறைந்த விளம்பரங்களும் ஒளிபரப்பாவது அதிர்ச்சி அளிக்கின்றது. சிலருக்கு ஆபாச அல்லது பாலியல் பாவம் மட்டுமே உலகமாக இருக்கிறது. இப்படிப்பட்டவர்கள் பாலியல் சார்ந்த ஆபாசங்களை கடவுளாக (விக்கிரகமாக) தினமும் வழிபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

ஆபாச வார்த்தைகளும், ஆபாச பார்வையும் கூட தான், விக்கிரக ஆராதனை. இன்றைய சிறப்பு வாழ்க்கை முறை பாலியல் மற்றும் ஆபாச பாவங்களை ஊக்கப்படுத்துகின்றது. அவை பைபிள் போதனைக்கு விரோதமாக உள்ளதா? இல்லையா? என கிறிஸ்தவ உலகமும் கூட கவலைப்படுவதில்லை (ஆதி 2:24–26 ; மத் 19:3–9). மனித உடலின் பெரும்பான்மையாக பாகங்களை (ஆணானாலும், பெண்ணானாலும்) வெளிப்படுத்தும் தீவிரம்தான் இன்று உள்ளது. உண்மையை சொல்லப்போனால், ஒன்றும் அணியாத ஆதிகால நிர்வாண நிலைக்கு நாம் தூரமாக இல்லை. (1 தீமோ 2:9–15). ஆண் மற்றும் பெண்களின் உடல்கள் இன்று, மதுவிற்கவும், வாகனங்கள் வீடுகள் மற்றும் இடங்களை மற்றும் நிறைய பொருட்களையும் விற்கவும் பயன்படுகின்றன. ஓரினச்சேர்க்கை இன்று சாதாரண உறவாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது; ஆனால் இப்படிப்பட்டவைகளை தேவன் உறுதியாக எதிர்க்கிறார் (ஆதி 19:5; லேவி 18:22; 20:13; உபா 23:17; ரோ 1:26–27; 1 கொரி 6:9–11).

விளையாட்டு என்னும் தெய்வம் இன்னொரு விக்கிரகமாக அநேகரால் வழிபடப்படுகின்றது. சபையின் சில விசுவாசிகளுக்கு, தொழுகையையோ பைபிள் ஸ்டடியையோ விட்டுவிட்டு, பல மணிநேரம் செலவழித்து பிரயாணம் செய்து, பல நூறு ரூபாய் செலவழித்து விளையாட்டு போட்டிகளில் பங்குபெறுவதோ பார்த்து ரசிப்பதோ ஒரு பெரிய விஷயமே இல்லை. வாழ்வில் நமக்கு முக்கியத்துவம் என்ற ஒன்றைப் பற்றி தெரியாதா? தன்னுடைய ராஜ்ஜியமாகிய சபையை முதன்மையாக வைக்க வேண்டும் என்பதைப் பற்றி ஆண்டவர் ஒன்றுமே சொன்னது இல்லையா? (மத் 6:33). அருமையானவர்களே ! இது இப்படி இருக்கக் கூடாது ! எந்த விளையாட்டு போட்டிகளையும்விட பரலோகம் மிகவும் முக்கியமானது. மற்றவர்களை தவறாக வழிநடத்த வேண்டாம். (1 கொரி 10:31–33).



வேறு சிலர் பலம் என்னும் கடவுளை விக்கிரகமாக வழிபடுகின்றனர். அவர்களுடைய குறிக்கோள் என்னவெனில், எச்சூழ்நிலையிலும் மனிதரை கட்டுப்படுத்த வேண்டும் என்பதே! சிலர் மற்றவர்களைவிட அதிக பலசாலிகளாக மாறுவதற்கு, திருடவோ, பொய் சொல்லவோ, உண்மையை புரட்டவோ எந்தவித ஏமாற்று வழிகளையும் உபயோகப்படுத்தவும் தயங்கமாட்டார்கள். இந்த ஒரு காரணத்தினால்தான் நம்முடைய தேர்தல்களில் எல்லாவித ஏமாற்று வேலைகளும் நடக்கின்றன. இப்படிப்பட்டவர்களின் குறிக்கோள் வெற்றிமட்டுமே அதனால் பிறரை சிலுவையில் அறையக் கூட அவர்கள் தயங்குவதில்லை. புதிய ஏற்பாட்டில்,



பார்வையற்றோர், முதியோர் சாலையை கடக்க உதவுங்கள் !

தியோத்திரேப்பு இப்படிப்பட்ட மனிதனே (3 யோ9-11) இப்பகுதியை வாசித்தும் பாருங்கள்.

அநேகர் வழிபடக்கூடிய இன்னொரு விக்கிரகம் “பிசாசு”. சாத்தானை வழிபட அவன் செய்த தந்திரங்களை இயேசு புறக்கனித்தார். பாருங்கள் ! சாத்தான் இயேசுவுக்கு, பூமியில் எல்லா ராஜ்யங்களையும், அதின் மகிமைகளையும் காண்பித்தான். தன்னை வணங்கும்படி சாத்தான், இயேசுவை வற்புறுத்தினான்; ஆனால் இயேசு,“... உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக” என்றார் (மத்4:1-11). சாத்தானுக்கு என்று தனியாக சொந்தமான சபைகள் உள்ளன(வெளி 2:9;3:9), சொந்தமான உபதேசங்கள் உள்ளன (1தீமோ 4:1-3), மற்றும் அவனுக்கு சொந்தமான ஊழியர்களும் (பிரசங்கியார்களும்) உள்ளனர் (2கொரி11:13-15). நாத்திகம் என்பதும் சாத்தான் வழிபாட்டின் வடிவமாகவே உள்ளது. நவீன உலகின் பாடல் வரிகள் இவ்வாறு உள்ளது. அதாவது,

நாங்கள் தீமைகளினால் நிரம்பியுள்ளோம்;
எங்கள் விரும்பம் கடவுளின் சாவுதான்;
நீங்கள் வணங்குபவர்மீது நாங்கள் துப்புவோம்;
மேலும் எங்கள் ஆண்டவராகிய சாத்தானின்
இடப்பக்கம் அமருவோம்.

எவ்வளவு வெட்கக்கேடு! வாலிபர், இப்படிப்பட்ட பாடல்களை கேட்க வேண்டிய அவசியம் இல்லை. இது கிறிஸ்துவின் மீதும், சபையின்மீதும், பைபிளின் மீதும் செய்யப்படும் தாக்குதல்.

பிரியமானவர்களே! நம் வாழ்வில் எது விக்கிரம்? நமது வேலையா? நமது உறவுகளா? நமது சொத்து,பணமா? நமது படிப்பா? நமது பாரம்பரியமா? நமது சுயமா? இன்னும் வேறு எதுவாக இருக்கிறது? என்று உடனே யோசிப்போம்.நாம் வணங்கும் தேவன் ஒருபோதும் விக்கிரகங்களையோ,விக்கிர வணக்கத்தையோ அனுமதிப்பதில்லை. மாறாக, உக்கிர கோபம் கொள்கிறார். அதனால் அதை உடனே நம்மைவிட்டு அகற்றுவோம். தேவ ஆசீர்வாதம் பெறுவோம்!

## *தெரிந்து கொள்வோம் !*

### மேலைநாட்டு அறிஞர்களின் தமிழ்ப்பணி

## இராபர்ட் தெ நோபிலி

**(Robert de Nobile S.J.)**

- இவர் உரோமப் பிரபுத்துவக் குடும்பத்தைச் சார்ந்தவர். 26 வயதில் இயேசு சபையில் சேர்ந்து கத்தோலிக்குக் குருவாகி, தமிழ் நாட்டில் சமயப்பணியாற்ற விரும்பி, 1605 மே மாதத்தில் கோவா வந்து சேர்ந்தார்.
- 1606 ஆம் ஆண்டில் மதுரையை அடைந்து, தமிழ்த்துறவி போல் வாழத்தொடங்கி, கத்தோலிக்க மறைபணியாளராகப் பணிபுரிந்தார்.
- இவர் தமிழில் 40 உரைநடை நூல்களை எழுதியுள்ளார். இத்தகைய பங்களிப்பால், இவர் “தமிழ் உரைநடையின் தந்தை” என்று அறியப்படுகிறார்.
- புறத்தோற்றத்தில் தமிழ்த்துறவியாக மாற்றம் கொண்டாலும், அகவுணர்வில் சமயக்கோட்பாடுகளினின்று சிறிதும் வழுவவில்லை.
- இந்திய குருமடத்தில் பயிற்சி பெறுபவர்களிடம் இருந்த, சாதி வெறியையும் மற்றும் வெறுப்பையும் விட்டுவிட வற்புறுத்தியிருந்தார்.
- வேதங்கள், புராணங்கள் ஆகியவற்றை ஆய்ந்தறிய வடமொழி, தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றார்.
- தமிழில் நாற்பது உரைநடை நூல்கள், மூன்று கவிதை நூல்களையும் இயற்றியுள்ளார்.
- இவற்றில் ஞானோபதேசக் குறிப்பிடம், ஞானோபதேசம் ஆகிய நூல்கள் குறிப்பிடத்தக்கவை.
- இவற்றைவிட சமஸ்கிருதத்தில் எட்டு நூல்கள்; அதிலே ஒன்றுக்குப் பெயர் “கிறிஸ்து கீதை”. மேலும் நான்கு தெலுங்கு நூல்கள் ஆகியவற்றையும் எழுதினார்.


ஆம்புலன்ஸ், தீயணைப்பு வண்டிகளுக்கு வழிவிடுங்கள் !


# தொடர் 8 சாமுவேல் : ராஜ்யம் நிலைநாட்டப்படுதல்

**வாசிக்க வேண்டிய அதிகாரங்கள்:**
**1–4, 7–13, 15–18, 20, 21, 23–25, 27, 28, 31**

## தலைப்பு:

1 சாமுவேல் என்ற இப்புத்தகம், கடைசி நியாயாதிபதியும், ராஜாக்களை ஏற்படுத்திய மாபெரும் மனிதருமான சாமுவேலின் பெயரைக் கொண்டு அழைக்கப்படுகிறது (இவர் இஸ்ரவேலின் முதல் இரு அரசர்களான : சவுல் மற்றும் தாவீது ஆகியோரை அபிஷேகம் பண்ணினார்). தொடக்கத்தில், 1 மற்றும் 2 சாமுவேல் என்ற புத்தகங்கள் ஒரு புத்தமாகவே இருந்தது; இது 1 இராஜாக்கள் என்று அழைக்கப்பட்டது. கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் “செப்துஜின்” மொழி பெயர்ப்பு உண்டாக்கப்பட்டபோது, இப்புத்தகங்கள் பிரிக்கப்பட்டன. “சாமுவேல்” என்றால் “தேவனிடத்தில் கேட்கப்பட்டவர்” என்று அர்த்தமாகும்

## பின்னனி

இப்புத்தகம், நியாயாதிபதிகளின் ஆட்சியில் இருந்து ராஜாக்களின் ஆளுகைக்கு மாறுதல் பற்றி கூறுகிறது. பிரதான ஆசாரியரான ஏலி, சாமுவேல் ஆகிய இருவருமே நியாயாதிபதிகளாக இருந்தனர் **(4:18: 7:15).** சாமுவேல் ஒரு மாபெரும் மனிதராய் இருந்தார். அவர் ஒரு ஆசாரியராகவும் நியாயாதிபதியாகவும் இருந்ததுடன், கூடுதலாக, முதன்முதலான வாய் மொழித்தீர்க்கதரிசி என்றும் அறியப்பட்டு இருந்தார் **(3:20, 21: 4:1).**

இருப்பினும், மக்கள் தங்களைச் சுற்றிலும் இருந்த மற்ற இனத்தவர்கள் கொண்டிருந்தது போல, தங்களுக்கும் ஒரு அரசன் வேண்டும் என்று விரும்பினர் **(8:5)**. இது சாமுவேலை புறக்கணித்தல் என்பதைவிட, தேவனுடைய ராஜரீகத்தையே அதிகமாய்ப் புறக்கணித்தலாக இருந்தது **(8:7).** மக்கள் பூமிக்குரிய அரசரைக் கொண்டிருத்தலில் உண்டாகும் விளைவுகள் பற்றி எச்சரிக்கப்பட்டனர். ஆனாலும் அவர்கள் இன்னமும் தங்களுக்கு ஒரு அரசன் வேண்டுமென்று கூக்குரலிட்டனர் **(8:10–22).** அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய மிகச் சிறந்ததை தேவன் அவர்களுக்குத் தந்தருளினார்.

இப்புத்தகத்தின் பெரும்பகுதியானது, சமஸ்த இஸ்ரவேல் மீது முதல் அரசராக சாமுவேலினால் அபிஷேகம் செய்விக்கப்பட்ட சவுலைப் பற்றிக் கூறுகிறது. தொடக்கத்தில் சவுல் ஒரு தாழ்மையான இளைஞராகவே இருந்தார். ஆனால் விரைவிலேயே அவர் தேவனுடைய கட்டளைகளைப் பொறுத்தமட்டிலும் கூட, தாம் விரும்பியபடியெல்லாம் செய்யலாம் என்ற உணர்வுகொண்ட மேட்டிமை நிறைந்த ஆட்சியாளர் ஆனார். தேவன் அவரை ஒரு ராஜாவாக இராதபடிப் புறக்கணித்தார். மற்றும் அடுத்த அரசராய் இருக்கும்படி எதிர்பார்க்கப்பட்ட தாவீது என்ற இளைஞர் சாமுவேலினால் அபிஷேகம் செய்விக்கப்பட்டார். இப்புத்தகத்தின் கடைசிப் பகுதியானது தாவீதின் எழுச்சி மற்றும் சவுலின் வீழ்ச்சி ஆகியவற்றைப் பற்றிப் கூறுகிறது. (தாவீதின் சங்கீதங்களில் பெரும்பான்மையானவை, அனேகமாக இந்த இடர்ப்பாடு மிக்க வேளையில் எழுதப்பட்டிருக்கலாம். **சங்கீதம் 37**ஐ கவனிக்கவும்). இப்புத்தகம் சவுலின் தற்கொலை பற்றிய கவலைமிக்க குறிப்புடன் முடிகிறது.

இந்தத் தொகுதியின் பெரும்பான்மையான பகுதியை, அனேகமாக சாமுவேல் எழுதியிருக்கலாம் **(10:25: 1 நாளாகமம் 29:29)** ஆகியவற்றைக் கவனிக்கவும். அவர் எழுதியிருந்தார் என்றால், அவரது மரணத்திற்குப் பிந்திய பகுதியானது **(25:1),** வேறு யாரேனும் ஒருவரால், அனேகமாக தீர்க்கதரிசிகளான நாத்தான் மற்றும் காத் ஆகியோரால் **(1 நாளாகமம் 29 :29)** எழுதப்பட்டிருந்தது.

## வரைகுறிப்பு

I. ராஜாக்களை ஏற்படுத்திய மாமனிதர் : சாமுவேல் (1- 8).

அ. சாமுவேலின் தொடக்ககால வாழ்வு **(1–3)**

1. சாமுவேலின் பிறப்பு **(1:1–2:11)**

சாலை விதிகளை மதிப்போம் ! விபத்தினை தவிர்ப்போம் !!

2. சாமுவேலின் வளர்ச்சியும், அதனுடன் முரண்பட்ட ஏலியின் தோல்வியும் (2:12–36)

3. சாமுவேலின் தீர்க்கதரிசன அழைப்பு (3)

ஆ. இன்னொரு சுழற்சி (4–7)

1. பெலிஸ்தர்களின் அடக்குமுறை (4:1–7:2)

2. மனந்திரும்புதலும், விடுதலையும் (7:3–17). சாமுவேல் நியாயாதிபதியாய் இருக்கின்றார்.

இ. சாமுவேல் புறக்கணிக்கப்படுகின்றார். மக்கள் ஒரு அரசர் வேண்டுமென்று விரும்புகின்றனர். (8).


II. சமஸ்த இஸ்ரவேல் நாடு முழுவதற்கும் முதல் அரசர் : சவுல் (9–31)

அ. சவுல் அபிஷேககிக்கப்படுகின்றார் மற்றும் சாமுவேல் புறக்கணிக்கப்படுகின்றார் (9–12)

ஆ. சவுலின் வீழ்ச்சி (13–15).

இ. தாவீதின் எழுச்சி (16:1–18:9).

ஈ. சவுலின் கடைசி நாட்களும், மரணமும் (28–31).



## சாமுவேல் புத்தகத்தில் இருந்து பாடங்கள்

ஒரு நல்ல மனிதராகவும், அதே வேளையில் ஒரு மோசமான தந்தையாகவும் இருப்பதற்குச் சாத்தியமுள்ளது. இதற்கு ஏலி ஒரு உதாரணமாக இருக்கின்றார் (2:12,17,22). அவர் தமது மகன்கள் செய்து கொண்டிருந்தவற்றைக் கவனிக்கவில்லை. அவர்களின் செயல்கள் பற்றி நடவடிக்கை எடுப்பதற்கு அவர் மிகவும் காலம் தாழ்த்தினார். அவர்களை அவர் ஒழுங்குபடுத்த முயற்சி செய்தபோது, அவர் போதிய அளவுக்கு உறுதி வாய்ந்தவராக இருக்கவில்லை (3:13). சாமுவேல் இன்னொரு உதாரணமாக இருக்கின்றார் (8:2,3). அவர் அனேகமாகத் தமக்குத் தாமே நற்செயல்களைச் செய்வதில் பணிமும்முரமாயிருந்து, அவர்கள் என்ன செய்து கொண்டிருந்தனர் என்பதைக் கவனிக்க இயலாமற்போய், தம்முடைய பிள்ளைகளை இழந்து போயிருக்கலாம்.

சவுல் ''தன்னையே முட்டாளாக்கிக் கொண்ட மனிதனுக்கு'' மிகச்சிறந்த உதாரணமாக உள்ளார் (26:21). அவர் குறைந்தபட்சம் சாவுக்கேதுவான ஆறு தவறுகளைச் செய்தார்: பொறுமையின்மை (13), அவசரம் (14), சுயசித்தம் (15), பொறாமை (18:8,9), கடைசியும் நிறைவுமான கீழ்ப்படியாமை (28), மற்றும் தற்கொலை (31:4). உண்மையான மனம் வருந்துதலும் வாழ்வில் மாற்றமும் இன்றி "நான் பாவம் செய்தேன்," என்று கூறுவது, ஒரு மனிதருக்குச் சாத்தியமாகவே உள்ளது (26:21).

தேவன் மனிதரின் வெளித்தோற்றத்தையல்ல, ஆனால் இருதயத்தைப் பார்க்கின்றார் (16:7). ஒரு ஊழியக்காரன் தம்முடைய இருதயத்திற்கு ஏற்ற மனிதராய்'' இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் (13:14; அப் 13:22ஐ காணவும்).

இயேசு புதிய ஏற்பாட்டில் கிறிஸ்து என்று அழைக்கப்படுகின்றார். "கிறிஸ்து" என்பது "அபிஷேகம் பெற்ற ஒருவர்" என்பதற்கான கிரேக்கச் சொல்லாகும். ''மேசியா'' என்பது ''அபிஷேகம் பெற்றவர்'' என்பதற்கான பழைய ஏற்பாட்டுச் சொல்லாகும்; இவ்வார்த்தை 2:10ல் முதன்முதலாகக் காணப்படுகிறது. ஆசாரியர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளைப் பிரதிஷ்டை செய்வதற்கு, பணியமர்த்துவதற்கு அபிஷேகம் பயன்படுத்தப்பட்டது, ஆனால் அபிஷேகம் செய்யப்படுதலினால் அரசர்கள் தனிப்படப் பிரித்துவைக்கப்பட்டனர் என்பது மிகவும் குறிப்பிடத்தக்கதாக இருந்தது (10:1:16:13). சவுல், ''கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்'' என்று அழைக்கப்பட்டார் (24:6: 26:9, 11), இது "கர்த்தடைய மேசியா" என்ற நேரடி அர்த்தம் உடையதாகும். யூதர்கள் மேசியாவை எதிர்நோக்கியிருந்தபோது, அவர் வேறு எப்படியிருப்பதைக் காட்டிலும் அதிகமாக ஒரு அரசராய் இருக்க வேண்டும் என்றே எதிர்பார்த்தனர்.

மது நாட்டுக்கும், வீட்டிற்கும், ஆத்துமாவிற்கும் கேடு !

தொடர் 3

# நாம் முற்றிலும் வெற்றி கொள்ளுகிறவர்கள்!

## We are more than conquerers !

### முகவுரை

முழு புத்தகத்தின் வரைக்குறிப்பை (Outline) வசனம் 19ல் காணுகிறோம். சுருக்கமான இந்த வரைக்குறிப்பில்,

1. யோவான் "கண்டவை" **(வெளி 1:1–20)**
2. சபைகளில் "இருக்கிறவை" **(வெளி 2:1–3:22)**
3. "இவைகளுக்குப் பின்பு சம்பவிப்பவை" **(வெளி. 4:1–22:21),** என்று குறிப்பிடப்படுகிறது. (வலியுறுத்தல் எண்ணுடையது).

### வசனங்கள் 1-8 : வெற்றி நமதே!

இப்புத்தகத்தின் நோக்கம்: (வச.1)

"சீக்கிரத்தில்" சம்பவிக்கப் போகிறவைகளைத் தமது ஊழியக்காரருக்கு (விசுவாசிகளுக்கு) தெரியப்பண்ண தேவன் விரும்புகிறார். ''சீக்கிரத்தில்'' நடக்கப்போகிறவைகள் எனும் போது இப்புததகம் எழுதப்பட்டதிலிருந்து ஏதோ சில நூறு ஆண்டுகள் கழித்து என்று பொருள் அல்ல. மாறாக "விரைவில்", அல்லது "சமீபத்தில்", அதாவது எழுதப்பட்டதிலிருந்து "சில ஆண்டுகளில்" நடக்கப்போகும் சம்பவங்களை வெளிப்படுத்த தேவன் சித்தங்கொண்டார்.

### அப்படி சீக்கிரத்தில் சம்பவிக்கப்போகிறவைகள் என்ன?

பெந்தெகோஸ்தே நாளில் சபை ஸ்தாபிக்கப்பட்டது முதல், சுவிசேஷம் வல்லமையாய் அப்போஸ்தலர்களின் உபதேசமாய் பிரசங்கிக்கப்பட்டு வந்தது. இதில் கிறிஸ்து உயிர்த்தெழுந்து பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டக் காட்சியும் **(எபிரேயர் 9:14,24)** தேவனுடைய வலது பாரிசத்திலிருந்து பரிசுத்த ஆவியை அனுப்பி, சபை ஸ்தாபிதம் பெற்றதையும் நாம் அறிந்திருக்கிறோம் **(அப். 2:1–4: 30–36, 41–47).** அந்நாளில் துவங்கிய அவருடைய ஆளுகை, அவருடைய இரண்டாம் வருகை வரை தொடரும். இக்காலக்கட்டங்களில் அவருடைய பிள்ளைகள், சந்துருக்களோடு அதாவது சாத்தானுடைய சேனைகளோடு, போராடி இறுதியில் வெற்றி கொள்வார்கள் என்று போதிக்கப்பட்டு வந்தனர் **(எபேசியர் 1:18–23: 1 கொரிந்தியர் 15:20–26).** அவர்கள் பரிகரிக்கும் (வெற்றி கொள்ளும்) கடைசி சந்துரு மரணம் **(1 கொரிந்தியர் 15:26).** இது ஏதோ புதுமையான காரியமல்ல. "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவமுண்டு" என்றும், "ஆனாலும் திடன் கொள்ளுங்கள், நான் உலகத்தை ஜெயித்தேன்" என்றும் ஆண்டவர் சொன்னார் **(யோவான் 16:33).**

இக்காலக்கட்டத்தில் டொமீஸியன் எனும் சக்கரவர்த்தி ரோம அரசில் ஆளுகை செய்து கொண்டிருந்தான். காலங்களினூடே அஞ்ஞான மதத்தில் தங்களை அதிக அதிகமாய் ஈடுபடுத்தியிருந்த ரோம சக்கரவர்த்திகள், இயேசுவின் பிறப்பின் போது கொலைவெறி கொண்டிருந்த ஏரோது முதல், டொமீஸியன் வரை தேவனுடைய மக்கள் எவ்வளவாய் உபத்திரவப் படுத்தப்பட்டனர் என்பதை புதிய ஏற்பாடு நன்கு விளக்கமளிக்கிறது; வரலாற்றுச் சான்றுகளும் இவைகளை அங்கீகரித்துள்ளன. ரோமர்களால் கி.பி.70ல் நிகழ்ந்த தேவாலயம் இடிக்கப்படுதல், யூதர்களின் அழிவு, எருசலேமின் அழிவு ஆகியன இவைகளுக்கு மிகப்பெரிய சான்றுகள். ரோம அரசை பொறுத்த மட்டில் தங்களுடையவர்களல்லாத வேறெந்த மத – மார்க்கங்களையும் ஒடுக்குவதை குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். இதற்கு கிறிஸ்தவம் அவர்களுடைய முயற்சிகளுக்கு பிரதான அறைகூவலாக (சவாலாக) இருந்தது. எனவே கி.பி.84 துவங்கி கிறிஸ்தவத்தை எல்லா வகையிலும் அழித்து போடுவதில் மும்முரமாக ஈடுபட்டனர். ரோம நாட்டை, தானே தீக்கொளுத்தி எரியவிட்டு அந்த வேளையில் "பிடில்" வாசித்து சந்தோஷப்பட்ட நீரோ மன்னன், கிறிஸ்தவர்களே ரோமிற்கு தீ வைத்ததாக வதந்தி எழுப்பியதும் சான்று. கடைசியில் டொமிஸியனின்

புகைப்பிடித்தல் புற்றுநோயை உண்டாக்கும் !

ஆளுகையின் போது உச்சக்கட்ட உபத்திரவத்தை கிறிஸ்தவம் சந்தித்தது. ஆகினும் கிறிஸ்தவமே வெற்றி கண்டது. இதுவே சீக்கிரத்தில் சம்பவிப்பவைகள். காலத்தினூடே கிறிஸ்தவம் தொடர்ந்து பல உபத்திரவங்களை சந்தித்தது; சந்தித்துக் கொண்டுள்ளது, கிறிஸ்துவின் வருகை வரை சந்திக்கும். ஆனாலும் முற்றிலும் வெற்றி கொள்ளப்போவது நாமே! **(1 வெளி 2:10)**

### கிறிஸ்தவம் ரோம அரசால் உபத்திரவப்படுத்தப்பட்டது ஏன்?

அங்கீகாரம் பெற்றவை, அங்கீகாரம் பெறாதவை என பிரித்துப் பார்க்கப்பட்டன. அவைகளில் அங்கீகாரம் பெற்றிராத மதமார்க்கங்களை கண்டிக்க அரசு உரிமை எடுத்துக்கொண்டது. ஆகிலும் அப்படிப்பட்ட மதமார்க்கங்கள் தேசத்தின் அமைதியை குலைக்காமலும், சமுதாய ஒழுக்கக் காரியங்களில் தலையிடாமலும் இருக்கும் வரை, ரோம அரசு சகித்துக் கொண்டது. இருப்பினும் அனுமதி பெற்றிராத மத-மார்க்கம் கொண்டிருந்த சட்ட திட்டங்களையும், பிரமாணங்களையும் நலமெனத் தோன்றியவைகளையும் தங்களுடைய தேவைக்கேற்ப தங்கள் மதம் சார்ந்த சட்டதிட்ட புத்தகங்களோடு அவ்வப்போது சேர்த்துக் கொண்டது. உண்மையில் அவர்களின் மதக் கோட்பாடுகளும் சட்டதிட்டங்களும், பக்தி சம்பந்தப்பட்டவைகளாகவோ, ஒழுக்க சம்பந்தப்பட்டவைகளாகவோ சார்ந்திராமல், அரசியலையும் இராணுவத்தையும் சார்ந்தவைகளாக இருந்தன. இதன் விளைவுதான் **(ரோமர் 1:20-32ல்)** பவுல் குறிப்பிடும் அனைத்துப் பாவங்களும் இடம் பெற்றன.

இந்த நிலையில் கிறிஸ்தவம் ஒரு அங்கீகரிக்கப்படாத மார்க்கமாக அவர்கள் மத்தியில் கருதப்பட்டது. ரோம அரசுக்கும் கிறிஸ்தவத்துக்குமிடையே தொடர்யுத்தம் தவிர்க்கக் கூடாததாயிருந்தது. ரோம அரசின் தவறான கண்ணோட்டமும் புரிந்து கொள்ளுதலும் கிறிஸ்தவத்தின் மேல் வீணான காழ்ப்புணர்ச்சி கொண்டு, கிறிஸ்தவர்களை உபத்திரவப்படுத்தியது. திருமறையில் குறிப்பிடப்பட்டுள்ளபடியும் பாரம்பரிய கருத்துக்கள் படியும், பேதுருவும் யோவானும் பவுலும் எவ்வளவாய் உபத்திரவங்களைச் சந்தித்தார்கள் எனத் தெளிவாகக் காணுகிறோம். பேதுரு தலைகீழாக தன் மனைவிக்கு முன்பாக சிலுவையில் அறையப்பட்டார் என்றும் **(யோவான் 21 : 18, 19),** பவுல் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டு பிறகு சிரச்சேதம் பண்ணப்பட்டார் என்றும் **(அப். 28 : 16: 2 தீமோத்தேயு 4 : 6-8),** இப்பொழுது வெளிப்படுத்தின விசேஷம் எழுதப்பட்ட காலத்தில் யோவான் பத்முத் தீவில் சிறைவைக்கப்பட்டிருந்ததும், **(வெளி 1 : 9),** இவைகளுக்கு ஆதாரம். இவைகளுக்கெல்லாம் காரணம், போட்டி மனப்பான்மைதான்.

1. முதல் நூற்றாண்டில் ரோம அரசு மற்றும் கிறிஸ்தவம் ஆகிய இரண்டுமே உலகளாவிய இடத்தைப் பெற்றிருந்தன.
2. குறிப்பிட்ட காலக்கட்டத்திற்குள் இரண்டுமே வெளிப்படையான விரிவாக்கத் தோற்றத்தைப் பெற்றிருந்தன.
3. இரண்டுமே திரளான கூட்ட ஜனங்களை தங்கள் பக்கம் ஈர்க்க பிரயாசப்பட்டன.

இப்படிப்பட்ட கடுமையான போராட்டங்களையும் உபத்திரவங்களையும் கிறிஸ்தவம் சந்தித்ததை நினைவுறும் போது "பூமியின்மேல் சமாதானத்தை அனுப்ப வந்தேன் என்று எண்ணிக் கொள்ளாதேயுங்கள்; சமாதானத்தையல்ல, பட்டயத்தையே அனுப்ப வந்தேன்" என்று இயேசு சொன்ன கருத்தை நினைத்துப் பார்க்கிறோம் **(மத்தேயு 10:34).**

அன்று ரோமில் அங்கீகரிக்கப்படாதிருந்த மதமார்க்களில் கிறிஸ்தவம் ஒரு தனித்துவிடப்பட்ட மார்க்கமாக, சொல்லி முடியாத வேதனைகளுக்கு உட்படுத்தப்பட்டது. ஏனெனில்,

1. கிறிஸ்தவம் மட்டுமே "ராஜ்யம்" என்ற கருத்தைப் போதித்து வந்தது. இது ஆவிக்குரிய ராஜ்யம் என்பதை ஏரோது ராஜாவோ, தேசாதிபதி பிலாத்துவோ புரிந்து கொள்ளாதது போலவே **(மத்தேயு 3: யோவா 18: 32, 33),** யூதர்களும் கூட புரிந்துகொள்ளவில்லை. இதன் தொடர்ச்சிதான், ரோம சக்கரவர்த்திகள் அனைவருமே வாழையடி

மது அருந்தாதீர் ! புகை பிடிக்காதீர் !!

வாழையாக கொண்டிருந்த தவறான கண்ணோட்டம். தங்கள் அரசுக்கு ஆபத்து வந்துவிடக் கூடும் என பயந்தனர்.

2. கிறிஸ்தவ உபதேசங்களெல்லாம் இவ்வுலகத்தின் நிலையாமையையும், அழிவையும் வலியுறுத்தக் கூடியதாக இருந்தன. ஆகையால் கிறிஸ்தவத்தை ஒரு புரட்சியைத் தூண்டும் இயக்கமாக ரோம அரசு கருதியது (2 பேதுரு 3:9–15).

3. கிறிஸ்தவத்தின் வேகமான பரவுதல், அரசுக்கும் தலைவர்களுக்கும் பயத்தை உண்டு பண்ணக் கூடியதாயிருந்தது. (அப். 5:14).

4. கிறிஸ்தவம் பரிசுத்தத்தை அதிகமாய் வலியுறுத்தியது. ரோமர் 1:20லிருந்து சொல்லப்படும் அனைத்து அசுத்தங்களையும் தன்னகத்தே கொண்டிருந்த ரோம அரசால், பரிசுத்தத்தை பற்றிக் கொள்ள இயலவில்லை; எனவே கிறிஸ்தவத்தை கால்மகாரமாய்க் கண்டனர்.

5. ரோம அரசின் பார்வையில், கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தில் உறுதியாய்த் தரித்திருந்த வைராக்கியம், அவர்களை அரசுக்கு கீழ்படியாத மார்க்கமாகப் பார்த்து பழிவாங்கத் துடித்தது.

6. பிற தேவர்கள் எனப்படுவோர் தெய்வங்கள் அல்ல, என்ற கிறிஸ்தவ உபதேசம் அவர்களை நாத்திகர்களாகக் காட்டியது.

7. எல்லாவற்றிற்கும் மேல், அவர்களின் விக்கிரகம் சார்ந்த பலதரப்பட்ட தொழில்களையும் கிறிஸ்தவம் அற்றுப்போகப் பண்ணியது (அப்19:18,19). ஆதலால் கிறிஸ்தவத்தை பூண்டோடு ஒழிக்கவே ரோம அரசு வெறி கொண்டிருந்தது.

இன்று நமது நாட்டின் நிலை, இதைக் காட்டிலும் வித்தியாசமாக எதுவுமில்லை. முதல் நூற்றாண்டு சபையிலிருக்கும் நாமும் பல முனைப் போரட்டங்களைச் சந்தித்துக் கொண்டுதான் உள்ளோம். கிறிஸ்தவத்தை நசுக்கவும் அழிக்கவும் கங்கணம் கட்டிக்கொண்டு, ஓயாமல் வசைபாடும் மதங்களும் மதம்சார்ந்த இயக்கங்களும் ஒரு புறம்; அவைகளுக்கு துணை போகும் அரசு ஒரு புறம்; தங்கள் பதவிகளைத் தக்கவைத்துக்கொள்ள மேற்குறிப்பிட்ட மனிதர்களை புகழ்பாடி பிரியபடுத்தி, ஆதாயங்காணும் கூட்டம் இன்னொருபுறம்; இவைகளுக்கப்பால் பலதரப்பட்ட குப்பைகளையும் உபதேசங்களாக போதித்து மக்களை மதிமயங்கச் செய்து கொண்டிருக்கும் கிறிஸ்தவ போர்வைக்குள் உலாவந்து கொண்டிருக்கும் பிரிவு கூட்டங்கள் இன்னொருபுறம்.

இப்படிப்பட்ட சவால்களைச் சந்திக்கும் உண்மை கிறிஸ்துவின் சபையே! நாம் நமது உபத்திரவங்களில் நிச்சயம் வெற்றி பெறுவோம். உண்மைக் கிறிஸ்தவம் தோற்றுப் போனதாக சரித்திரம் இல்லை (வெளி. 2:10). வீறிட்டு எழுந்து பிரகாசியுங்கள்! நாம் முற்றிலும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம் (ரோமர் 8:36, 37).

தொடரும்....

இ.ஏ. ஆறுமுகம்
திண்டுக்கல்

## வாசகர்கள் கவனத்திற்கு

வாசகர்களே! உங்கள் வேண்டுகோளுக்கிணங்க, வங்கியின் மூலம் நமது இதழுக்கான சந்தாவையும், சிறப்பு புத்தகங்களுக்கான தொகையையும் செலுத்த கீழே உள்ள விபரங்களை கவனிக்கவும்.

| | | |
|---|---|---|
| Account Name | : | KIRUBAIYULLA VARTHAI |
| A/c No. | : | 57022317422 |
| Bank Name | : | STATE BANK OF TRAVANCORE |
| Branch | : | PONMENI BRANCH, MADURAI |
| IFSC Code | : | SBTR0000704 |

பணத்தை அனுப்பிய பின் 92 4421 4421 அல்லது 92 4431 4431 என்ற எண்ணுக்கு தகவல் தெரிவிக்கவும்.
SMSல், உங்களுடைய கிருபையுள்ள வார்த்தை பதிவு எண்ணையும், எவ்வளவு தொகை என்பதையும், தெரியப்படுத்தவும். உங்களது ஒத்துழைப்பிற்கு நன்றி !



## பரலோக தேவனுக்கே மகிமை உண்டாகட்டும் !

- சமீபத்தில் நமது J.C ஆத்தும ஆதாய பள்ளியில் பட்டம் பெற்ற 25 மாணவர்களும், கடந்த 18 மாதங்களில், ஒவ்வொரு மாதமும் செய்த ஆத்தும ஆதாய பணியின் விளைவாக ...
    - 5000 பேருக்கு வீடுவீடாக சென்று கைபிரதிகளை கொடுத்துள்ளனர்.
    - 500 பேருக்கு தாபல்வழி பைபிள் பாடங்களை கொடுத்து, படிக்க வைத்துள்ளனர்.
    - மாணவர்கள் தாங்கள் சந்தித்த நபர்களில் 17 பேருக்கு திருமுழுக்கு கொடுத்துள்ளனர்.
    - மேலும் பட்டம் பெற்ற அன்றைய தினத்தில். அவர்கள் பயிற்சியை நிரூபிக்கதக்க வகையில், 5 பேர் திருமுழுக்கிலே வசனத்திற்கு கீழ்படியும்படி செய்தனர்.
- கொடுத்தல் காரியத்தில், மாணவர்களே தங்கள் சொந்த பணத்தில் 3 லட்ச ரூபாய் வரை செலவழித்து, சபை கட்டிடத்தை புதுப்பித்துள்ளனர்.
- ஊழியருக்கு மோட்டர் பைக் வாங்கி கொடுத்துள்ளனர். மேலும் மாதந்தோறும் ஊழியருக்கு சம்பளம் கொடுக்க முடிவெடுத்து அதை செய்து வருகின்றனர்.
- பிரியமானவர்களே! இந்த J.C. ஆத்தும ஆதாயப் பயிற்சிப் பள்ளியின் பயிற்சிக்காக, ஒத்துழைப்பு தரும் ஊழியர்கள் மற்றும் சபையாருக்காக ஜெபியுங்கள்! நீங்களும் உங்கள் பகுதியில், இந்த பயிற்சி வகுப்புகள் நடைபெற விரும்பினால் எங்களைத் தொடர்புக்கொள்ளுங்கள்!

## Gospel Through Media by World Evangelism Team

**Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :** Every Sunday 6.45 - 7.00 a.m (TAMILNADU Contact Mobile : ***92 4421 4421 & 92 4431 4431)*** ***Puthuyugam TV*** *: Every Tuesday 6 :15 a.m.*

**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV :** Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

**Arjunan in Tamil on Tamilan TV & Radio :** TV : Every Monday 6.00 - 6.15 a.m. and Every Saturday 6.15 - 6.30 p.m. Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :** Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m. **Rakshana T.V :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 088423 63722)

**P.R. Swamy & Douglas in Tamil on Radio :** Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 098440 70763)

**P.K. Varghese in Malayalam on JaiHind TV:** Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel.

(KERALA Contact Mobile : 94470 35465)

**Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :** Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel. (NEW DELHI Contact Mobile : 098108 96789)

பாடம் 1

# பாதுகாக்கும் மெய்யான தேவன் !

சிறுவர் பகுதி

ஹாய் செல்லங்களா! அக்கா உங்களுக்கு இந்த மாதம், நம்மை படைத்த தேவன், தானியேலை காப்பாற்றியதைப் பற்றி சொல்லப்போறேன். உங்களுக்கு பிடிக்கும் தானே?

பாபிலோன் என்ற நாட்டிலே தரியு என்ற பேரரசன் ஆட்சி செய்து வந்தார். அவர் உலகத்திலுள்ள 120 நாடுகளையும் ஆண்டார். அவருடைய நாட்டின் தலைமை பிரதானிகளில் (மந்திரி மாதிரி) ஒருவராக தானியேல் என்பவரும் இருந்தார். தானியேல் தேவனுக்கு பயந்து அரசனிடத்தில் நேர்மையாகவும், அதே வேளையில் தேவனை ஆராதிப்பதிலும் உண்மையுள்ளவராக இருந்ததார்.

தரியு ராஜா, தானியேல் மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தார். தானியேலின் தேவபக்தியும், நேர்மையான வாழ்க்கையும் ரொம்பவே ராஜாவினை ஈர்த்தது. இது மற்ற பிரதானிகள் யாவருக்கும் பிடிக்கவில்லை. அதனால் தானியேலிடம் ஏதாவது குற்றம் கண்டுபிடிக்க முயற்சி செய்தனர். அவர்கள் ஒரு சதி திட்டம் தீட்டினர்.



அது என்ன தெரியுமா? தானியேல் என்ன நடந்தாலும், உயிரே போனாலும் கூட, அவனுடைய கர்த்தராகிய தேவனை மட்டும் தான் வழிபடுவான். ஆகையால் நாம் ராஜாவிடம் சென்று, 'ராஜாவே ! முப்பது நாள் வரைக்கும் மக்கள் அனைவரும் உங்களை தவிர வேறு யாரையும் வணங்கக்கூடாது. அப்படி மீறி வணங்கினால், அவர்களை சிங்கங்களின் கெபியிலே (குகையிலே) போட்டு கொன்றுவிட வேண்டும்' என்று சொல்லுவோம் ஆலோசனை செய்தார்கள்.

அது மட்டுமா? ராஜாவிடம் சென்று, தந்திரமாக பேசி அவரை சம்மதிக்க வைத்து, 120 நாடுகளுக்கும் ராஜாவின் பேரில் உத்தரவு அனுப்பினார்கள். மக்கள் அனைவரும் ராஜாவின் கட்டளைக்கு பயந்து ராஜாவை மட்டும் வணங்கினார்கள். ஆனால், தானியேல் என்ன செய்தார் தெரியுமா? உயிரே போனாலும் பரவாயில்லை என்று, எப்பொழுதும் போல கர்த்தராகிய தேவனை வழிபட்டார். ஆகையால் பிரதானிகள் ராஜாவிடம் சென்று, 'தானியேல் உங்களை வணங்காமல் அவனுடைய தேவனை வழிபட்டு ராஜாவின் கட்டளையை மீறிவிட்டார். அவனை சிங்க கெபியிலே போட வேண்டும்' என்றனர். ராஜாவும் மனமின்றி சம்மதித்தார்.

தானியேலை சிங்க கெபிக்குள் தூக்கிப்போட்டனர். மறுநாள் அதிகாலையில் ராஜா, 'தானியேலே, நீ இடைவிடாமல் ஆராதித்த தேவன் உன்னை காப்பாற்றினாரா?' என்று கேட்டார். தானியேல், 'ஆம் ! ராஜாவே, சிங்கங்கள் என்னை கடித்து, கொன்றுபோடாதபடிக்கு என் தேவன் தம்முடைய தூதனை அனுப்பி அவைகளின் வாய்களை கட்டிப்போட்டார்' என்றார். பின்பு ராஜா, தானியேலின் கடவுள் தான் மெய்யான கடவுள், அவரை தான் அனைவரும் வழிபட வேண்டும் என்று 120 நாடுகளுக்கும் கட்டளை பிறப்பித்தார்.

செல்லங்களா, கவனித்தீர்களா? உயிரே போனாலும் பரவாயில்லை என்று, தானியேல் அண்ணன் நம்மை படைத்த தேவனை மட்டும் தான் வணங்கினார். ஆகையால் தேவன் அவரை அற்புதமாக பாதுகாத்தார். நாமும் என்ன நடந்தாலும், ஏன் உயிரே போனாலும் கூட தேவனை தவிர வேறு எதையும் வணங்கக்கூடாது! தானியேலை பாதுகாத்த தேவன் நம்மோடிருந்து நம்மையும் காப்பார்.

**மனன வசனம் : தானியேல் 6 :16**

"நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னைத் தப்புவிப்பார்"

உங்கள் அக்கா

- பிரியா ஆண்டனி


பாடம் 2

# கர்த்தரே மெய்யான கடவுள் !

சிறுவர் பகுதி

கடவுளின் செல்லங்களா ! உங்கள் யாவரையும் ஆண்டவர் இயேசுவின் மூலம் வாழ்த்துகிறேன். நீங்கள் எல்லாரும் நன்றாக படிக்கிறீர்களா? அம்மா அப்பாவுக்கு கீழ்படிகிறீர்களா? சந்தோஷமாக இருக்கிறீர்களா? இந்த சந்தோஷத்தோடே மெய்யான கடவுளைப் பற்றித் தெரிந்துக்கொள்ளலாமா? உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்!

ஆகாப் என்னும் ராஜா இஸ்ரவேல் நாட்டை ஆண்டார். அவர் மனைவி பேர் யேசபேல். இவர்கள் இருவரும் இஸ்ரவேல் மக்கள் எல்லாரையும், பாகால் என்ற விக்கிரத்தை(சிலையை) வணங்கும்படியாக செய்தார்கள். அந்த நாட்டில் எலியா என்னும் தீர்க்கதரிசி இருந்தார். அவர் ஆகாப் ராஜாவிடம் சென்று, 'ராஜாவே கர்த்தர் நம்மை படைத்து காக்கும் கடவுளாக இருக்கையில், நீங்களும் உங்கள் மனைவியும், இஸ்ரவேலரை, பாகலை (விக்கிரகம்) வணங்கும்படி செய்தது என்ன?' என்று கேட்டார். மேலும், 'இன்றைய நாளில் கர்த்தர் தான் மெய்யான கடவுள் என்பதை நான் உங்களுக்கு தெரியப்படுத்துவேன். நீங்களும் உங்கள் பாகால் தீர்க்கத்தரிசிகளும் கர்மேல் மலைக்கு வாருங்கள்' என்று கூப்பிட்டார்.



கர்மேல் மலை மீது இரண்டு பலிபீடம் கடப்பட்டது. ஒன்று பாகாலுக்கு மற்றொன்று நம்மை படைத்த கர்த்தராகிய தேவனுக்கு. முதலில் பாகால் தீர்க்கதரிசிகள் 450 பேரும் பாகாலின் பலிபீடத்தின் மேல் ஒரு காளையை துண்டு துண்டாக வெட்டி வைத்து, அதன் மீது விறகுகளை அடுக்கினார்கள். பின்பு அவர்கள் அனைவரும் நெருப்பினை அனுப்பி, பலியை ஏற்றுக்கொள்ளும்படி, காலை முதல் மாலை வரை பாகாலை கூப்பிட்டார்கள். ஒரு சத்தமும் வரவில்லை. அவர்கள் கட்டின பலிபீடத்திற்கு எதிரே குதித்து ஆடினார்கள். மேலும் தங்கள் சரீரத்தை (உடலை) இரத்தம் வடியும்பட்டும் கத்தியாலும் ஈட்டியாலும் கீறிக் கொண்டர்கள். அப்பொழுதும் எதுவும் நடக்கவில்லை.

பிறகு, எலியா தீர்க்கதரிசி ஜனங்களை நோக்கி : என் கிட்டே வாருங்கள் என்றார். ஜனங்களும் வந்தார்கள். கர்த்தருடைய பலிபீடத்தின் மேல், ஒரு காளையை வெட்டி, விறகுகளை அதன் மீது அடுக்கி, 12 குடம் தண்ணீரை அதன் மேல் ஊற்றி, எலியா தேவனை நோக்கி : "உம்முடைய வார்த்தையின்படி இவைகளை செய்கிறேன், கர்த்தாவே நீர் மெய்யான தேவனென்று இந்த ஜனங்களுக்கு விளங்க பண்ணும்" என்று வேண்டினார். என்ன ஆச்சரியம்! உடனே, கர்த்தரிடத்திலிருந்து அக்கினி இறங்கி, அந்த சர்வாங்க தகன பலியையும் விறகுகளையும் கற்களையும் மண்ணையும் பட்சித்து, வாய்க்காலில் இருந்த தண்ணீரையும் நக்கி போட்டது. ஜனங்கள் எல்லாரும் இதை கண்டபோது, முகங்குப்புற விழுந்து, 'கர்த்ததே தெய்வம், கர்த்தரே தெய்வம்' என்றார்கள்.

பிள்ளைகளா, நம்மை படைத்த வேதாகமத்து மெய்யான கடவுளை தவிர, வேறு எதையும் நாம் வணங்க கூடாது! அவரை தவிர வேறு எதற்கும் முக்கியத்துவம் கொடுக்க கூடாது! வேலையையோ, படிப்பையையோ, ஏன் அம்மா, அப்பாவை கூட கடவுள் என்று சொல்லக்கூடாது! மெய்யான கடவுளுக்கு கொடுக்க வேண்டிய இடத்தை, வேறு யாருக்கும் கொடுக்கவும் கூடாது! வணங்கவும் கூடாது! சரியா? மெய்யான ஒரே தேவனை மட்டும் வணங்குங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

**மனன வசனம் : சங் 116 :2**

"அவர் தமது செவியை எனக்குச் சாய்த்தபடியால், நான் உயிரோடிருக்குமளவும் அவரைத் தொழுது கொள்ளுவேன்"


– அண்ணன்
**அன்பு ஏசுதாஸ். எஸ்.**

# கைவிடாத மெய்யான தேவன் !



ஹாய் குட்டீஸ் ! ஒவ்வொரு மாதமும் நாம் படிக்கின்ற விஷயங்களை பயிற்சி செய்றீங்க தானே? அப்படி செய்கின்ற உங்களை தேவன் ஆசீர்வதிப்பார். சரி, இந்த முறை தேவன் ரொம்பவே வெறுக்கின்ற ஒரு விஷயத்தைப் பற்றி தெரிந்துக்கொள்வோமா?

பாபிலோன் என்ற நாட்டிலிருந்து, உலகத்தின் பெரும்பாலான நாடுகளை நேபுகாத்நேச்சார் என்ற மகாராஜா ஆண்டு வந்தார். ஒருமுறை அவர் தங்கத்திலான பெரிய சிலை ஒன்றை செய்து வைத்து, மக்கள் அனைவரும் அந்த சிலையை மட்டும் வணங்க வேண்டும் என்றும், மீறினால் எரிகிற அக்கினி (நெருப்பு) சூளையிலே போட்டு கொல்லப்பட வேண்டும் என்றும் கட்டளை போட்டார்.



மக்களெல்லாரும் மகாராஜாவின் தண்டனைக்கு பயந்து, அவர் செய்துவைத்த சிலைக்கு முன்பாக விழுந்து வணங்கினார்கள். ஆனால் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்ற 3 பேரும் அந்த சிலையை வணங்கவில்லை. ராஜா அவர்களை கூப்பிட்டு, 'நான் உங்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு தருகிறேன். நீங்கள் இப்பொழுது நான் செய்த இந்த சிலையை வணங்குங்கள். இல்லையென்றால், உங்களை அக்கினி சூளையிலே போட்டுவிடுவேன், உங்களை என்னிடமிருந்து உங்கள் தேவனாலே காப்பாற்ற முடியாது' என்றான்.

அவர்கள் 3 பேரும் என்ன சொன்னார்கள் தெரியுமா? 'ராஜாவே ! நாங்கள் வணங்குகிற தேவனாகிய கர்த்தர் எங்களை காப்பாற்ற வல்லவராகயிருக்கிறார். அவர் எங்களை காப்பாற்றாமல் விட்டுவிட்டாலும் பரவாயில்லை, நாங்கள் கர்த்தராகிய தேவனை தவிர, நீர் நிறுத்தின சிலையை நிச்சயம் வணங்க மாட்டோம்' என்றார்கள்.

ராஜா இதைக் கேட்டு மிகவும் கோபமடைந்து, அக்கினியை 7 மடங்கு அதிகரிக்க வைத்து, அவர்கள் 3 பேரையும் தூக்கிப்போட சொன்னார். ராஜா சொன்னபடியே அவர்களை தூக்கிப்போட்டார்கள். அப்பொழுது என்ன நடந்தது தெரியுமா? அவர்கள் 3 பேரும் அக்கினி சூளையிலே எரிந்து சாம்பலாவார்கள் என்று எல்லாரும் எதிர்பார்த்தனர். ஆனால் அவர்கள் 3 பேரும் ஒரு சேதமும் ஆகாமல், இவ்வளவு ஏன்? அவர்கள் முடி கூட கருகாமல், அப்படியே பத்திரமாக வெளியே வந்தனர். ஏன் தெரியுமா? நமது தேவன் அவர்களை அற்புதமாக பாதுகாத்தார். ஏனென்றால், அவர்கள் தேவனை தவிர, சிலையை வணங்காததினால் தான்! உடனே! ராஜா என்ன செய்தார் தெரியுமா? தேவனை தவிர, நீர் நிறுத்தின சிலையை நிச்சயம் நமது தேவன் அவர்களை அற்புதமாக பாதுகாத்தார். ஏனென்றால், அவர்கள் தேவனை தவிர, சிலைகளை வணங்காததினால் தான். உடனே ராஜா என்ன செய்தார் தெரியுமா? உலகம் முழுவதும் தன்னுடைய கட்டுப்பாட்டில் உள்ள நாடுகள் அனைத்திற்கும் "தேவனாகிய கர்த்தர் தான் மெய்யான கடவுள். அவரைப் போல யாராலும் காப்பாற்ற முடியாது" என்று தீர்மானம் எழுதி அனுப்பினார்.

**மனன வசனம் : யோவான் 4 :24**

"தேவன் ஆவியாயிருக்கிறார்; அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரை தொழுதுகொள்ள வேண்டும் என்றார்"

அன்புடன் அக்கா
**– குயினி பிலேமோன்**

# இம்மாதக் கேள்விகள் ?

1. "உன் தேவனாகிய கர்த்தர் நானே. என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்" என்று கட்டளையிட்டவர் யார் ?
2. கர்த்தர், தன் மகிமையை, தன் துதியை யாருக்கு கொடேன் என்றார் ?
3. எவைகளுக்கு விலகி, உங்களை காத்துக் கொள்ளுங்கள் என்கிறார் யோவான் ?
4. விக்கிரகாராதனைக்காரர் எதில் பங்கடைவார்கள் ?
5. அஞ்ஞானிகள் பலியிடுகிறவைகளை யாருக்கு பலியிடுவதாக பவுல் கூறுகிறார் ?
6. "தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்". ஏன் ?
7. எவைகளை நினைக்கிற நினைப்பும் இல்லாமற் போகும், என்கிறார் ஓசியா ?
8. அந்நிய தேவனை நாடிப் பின்பற்றுகிறவர்களுக்கு எது பெருகும், என்கிறார் சங்கீதக்காரன் ?
9. கர்த்தர், எதை இடித்து, எதை தகர்த்து, எதை வெட்டிப் போடுங்கள் என்றார் ?
10. அவரே என்றென்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்பட்டவர். யார் – அவர் ?

# சிறுவர்க்கான கேள்விகள்

1. தானியேல் உயிரே போனாலும் பரவாயில்லை என்று, என்ன செய்தார் ?
2. தானியேலின் கடவுள் தான் மெய்யான கடவுள் என்று சொன்னது யார் ?
3. கர்த்தரிடத்திலிருந்து அக்கினி இறங்கி வந்து என்ன செய்தது ?
4. ஜனங்கள் எல்லாரும் என்ன செய்தார்கள் ?
5. சிலையை வணங்காத மூவரையும் எதில் போட்டார்கள் ?
6. அவர்களை அற்புதமாக காப்பாற்றியது யார் ?
7. நீ யாரை மட்டும் வணங்கப் போகிறாய் ?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 5-12-2015**

அனுப்ப வேண்டிய முகவரி : சகோதரி. **பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை – 625 016
செல்: 92 4421 4421, 92 4431 4431

## சென்ற மாத பதில்கள்

1. உபா 6:7
2. எபி 4 : 12
3. யாத் 20 : 4
4. மத் 19 : 8
5. 1 கொரி 7 : 2
6. அப் 17 : 31
7. நியா 17 : 6;21 : 25
8. வெளி 1 : 3
9. 2 பேதுரு 1 : 20
10. யாத் 20 : 5

## அக்டோபர் மாதம் பதில் எழுதியவர்கள்

1. S. அசோக்குமார் பிரின்ஸ் – கச்சனாவிளை
2. Mrs. J. ரேச்சல் தமிழரசி – மதுரை
3. J. ஜோசப் – கோவில்பட்டி
4. Mrs. G. ஏஞ்சலம்மாள் – வளர்நகர்
5. Mr. J. விஜய் – வளர்நகர்
6. ஹெப்ஸி பியூலா – மதுரை
7. Mrs. பிரேமலதா சுந்தர்பாபு – செங்கல்பட்டு
8. Mrs. J. கஸ்தூரி கலாவதி – மதுரை
9. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி– திருச்சி
10. A. ரோஸ்மேரி – சென்னை
11. Mrs. ஹெப்ஸி தாமஸ் – படப்பை
12. Mrs. ரூபி ஜெபராஜ் – மதுரை
13. Mrs. ஸ்டெல்லா வால்டர் – கோவை
14. Mrs. ஷீலா ரிச்சர்ட் தாஸ் – சென்னை
15. G. பீற்றர் பால்ராஜ் – தூத்துக்குடி
16. Mrs. காந்தா மனோகரன்– திருச்சி
17. Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
18. Mrs. மேரி சாராள் – சமயநல்லூர்
19. Mrs. ஹெலன் திலக் – மதுரை
20. Mr. M. லாரன்ஸ் கோபி – வேப்பங்கனேரி
21. Mr. K. மோகன் – குமாரபாளையம்
22. Mr. B. ஜாய்ஸ் ஜோசுவா – தூத்துக்குடி
23. J. திலக் தானியேல் – சென்னை
24. Mrs. G. சரிதா கோபி – வேப்பங்கனேரி
25. Mrs. பிலோமினா பிரபாகரன் – காரைக்கால்
26. J. செல்வி ஜெயராஜ் – நாமக்கல்
27. Mr. வின்செண்ட் – மேலூர்
28. Mrs. பியூலா ஜேசுராஜன் – புதுச்சேரி
29. M.C. ஜேம்ஸ் – நாகர்கோவில்
30. E.J. எஸ்தர் – சென்னை
31. Mrs. சுகந்தி ஜோன்ஸ் – திருச்சி
32. Mrs. ஜெயமணி ஜெயபாண்டியன் – கடலூர்
33. Dr.D.S. ஜேசுராஜன் – திண்டுக்கல்
34. P. இந்திரா பாண்டி – திருமங்கலம்
35. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்
36. P. சௌந்தரபாண்டி – திருமங்கலம்
37. P. சூரிய பிரியா – திருமங்கலம்
38. M. ஈஸ்வரி – கரூர்
39. M. அரவிந்த் – கோவை
40. S. கேத்ரின் அருள்நேசம் – மதுரை
41. M. புஷ்பராணி – நாமக்கல்
42. R. சரோஜா – தென்கலம்
43. I. அலெக்சாண்டர் சாலமோன் – சிவகங்கை
44. Mrs. மேரிராஜ் – மதுரை
45. Mrs. S. விஜயசந்திரா – கோவை
46. G. புஷ்பா ஜேம்ஸ் – விருதுநகர்
47. Mrs. சாந்தா ஜெயக்குமார் – சென்னை

## சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. G. பிரசன்னா பிளஸ்ஸி – வேப்பங்கனேரி
2. S. மெர்ஸி சோபியா – திருநெல்வேலி
3. M. வின்செண்ட் – பூச்சியூர்
4. A. கெனித்சாம் – மதுரை
5. I. ஷீபா பிரியதர்ஷினி – சிவகங்கை

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

# JC ஆத்தும ஆதாயப் பயிற்சி பள்ளியின் 6வது பட்டமளிப்பு விழா (திண்டுக்கல்)

















Owned, Published & Edited by P.C. PHILEMON RAJAH
Printed at Thee Classic Printers Madurai-1 Phone 2323819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2015-2017
Posted at Arasaradi HPO on 10th, 11th November 2015

## தபால் வழி பைபிள் பாடங்கள்






அடிப்படை (Basic) மற்றும் முதுநிலை (Advanced) பைபிள் பாடங்களை தபால் வழியில் படித்து, அழகிய சான்றிதழும் (Certificate) முழு பைபிளையும் பரிசாக பெறுங்கள்!



## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்







அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/-மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!


உங்கள் சுவிஷேச ஊழியத்திற்கு
கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில்
பாதி விலையில் கிடைக்கும்.
விபரங்களுக்கு

**92 4421 4421, 92 4431 4431**

If undelivered please return to :

**EDITOR**
**KIRUBAIYULLA VAARTHAI**
45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To

Visit www.graciousword.org to read kv magazine online
follow us facebook NT Gospel Restorers